

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 304 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 31 – புதன்கிழமை 14 ஜூன் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 304:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 31 - Wednesday 14 June 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாமல் புறவாசல் வழியாக

# பா.ஜ.க. அச்சுறுத்தல் செல்லுபடியாகாது!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை,ஜூன்.14–**

**அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாதவர்களை, புறவாசல் வழியாக அச்சுறுத்தப் பார்க்கும் பா.ஜ.க.வின் அரசியல் செல்லுபடியாகாது" எனவும் "அதனை அவர்களே உணரும் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது" எனவும் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளார்.**

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:**

தன் வசம் இருக்கும் விசாரணை அதிகார அமைப்புகள் மூலமாகத் தனக்கு எதிரான அரசியல் சக்திகளை பா.ஜ.க. பழிவாங்கும். அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி இது மட்டும்தான் என்று நான் ஏற்கனவே சொல்லி இருந்தேன். இதற்கு இந்திய அளவில் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் சமீப காலங்களில் பல்வேறு மாநிலங்களில் நடந்துள்ளன.

இந்த நிலையில் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களது இல்லத்தில் இன்று காலை முதல் அமலாக்கத்துறையினர் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

**அமைச்சர் செந்தில் பாலாஜி முழு ஒத்துழைப்பு!**

'சோதனைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம், எந்தச் சோதனையாக இருந்தாலும் ஒத்துழைப்பு தருவேன், ஆவணங்கள் கைப்பற்றப்பட்டாலும் அதற்கு உரிய விளக்கம் அளிக்கத் தயார்' என்று அமைச்சர் செந்தில் பாலாஜியே பேட்டியும் அளித்துள்ளார். விசாரணை நடைபெறும் இடத்தில் இருந்து முழு ஒத்துழைப்பைத் தந்து வருகிறார்.



இந்த நிலையில் தலைமைச் செயலகத்தில் அமைச்சரது அறைக்குச் சென்று தேடுதல் நடத்த வேண்டிய தேவை என்ன ஏற்பட்டது என்று தெரியவில்லை. தலைமைச் செயலகத்திலும் ரெய்டு நடத்துவோம் என்று காட்டவோ, அல்லது அதனைக் காட்டி மிரட்டவோ விரும்புகிறார்களா எனத் தெரியவில்லை. இவை எல்லாம் விசாரணை அமைப்பானது அரசியல் உள்நோக்கத்துடன் செயல்படுவதையே எடுத்துக் காட்டுகிறது.

**கூட்டாட்சித் தத்துவத்துக்கே களங்கம்!**

ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன் தமிழ்நாட்டுக்கு வந்து சென்ற நிலையில் உடனடியாக இதுபோன்ற காரியங்கள் நடக்கிறது என்றால் என்ன பொருள்? பொதுமேடைகளில் தி.மு.க.வையும் ஆட்சியையும் கடுமையாக விமர்சித்துச் சென்றார் ஒன்றிய அமைச்சர் அவர்கள். அதற்குத் தகுந்த விளக்கத்தை நாங்கள் கொடுத்துவிட்டோம். ஆனால் இது போன்ற அமலாக்கத்துறை தாக்குதல்களைத் தலைமைச் செயலகத்தின் மீதே தொடுப்பது கூட்டாட்சித் தத்துவத்துக்கே களங்கம் ஏற்படுத்துவது ஆகும்.

ஒரு மாநில அரசின் மாண்பு காக்கும் தலைமைச் செயலகத்துக்குள் மத்திய காவல் படையை அழைத்து வந்து அதிகாரிகள் சோதனை நடத்துவதுதான் அரசியல்சட்ட மாண்பைக் காப்பதா?

**மிகத் தவறான, முன்னுதாரணங்கள்!**

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 2016ஆம் ஆண்டு அன்றைய தலைமைச் செயலாளராக இருந்த ராம் மோகன்ராவ் அவர்களது வீட்டிலும், தலைமைச் செயலகத்திலும் வருமான வரித்துறை ரெய்டு நடத்தியது. "தலைமைச் செயலகம் என்பது மாநில அரசின் மூளை போன்ற முக்கியப் பகுதி. கூட்டுறவு கூட்டாட்சி பேசிக் கொண்டே அந்த தலைமைச் செயலகத்தில் மத்திய போலீஸ் படையை அனுப்பி, தலைமைச் செயலாளராக இருந்த ராம்மோகன் ராவ் அலுவலகத்துக்குள்ளேயே ரெய்டு நடத்துமாறு வருமான வரித் துறையை இயக்கியது ஒன்றிய அரசு. இது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிரானது" என்று, அன்றைய ஆட்சியாளர்கள் கண்டிக்காமலும் கண்டுகொள்ளாமலும் இருந்தபோது, அதனைக் கண்டித்து நான் அறிக்கை வெளியிட்டேன். எனவே, யாருக்கு நடந்தது என்பதல்ல முக்கியம். எங்கு நடத்தப்பட்டது என்பதே முக்கியம். மிகத்தவறான முன்னுதாரணங்களைத் தொடர்ந்து பா.ஜ.க. உருவாக்கி வருகிறது.

பா.ஜ.க.வின் மிரட்டல் அரசியலை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அரசியல்ரீதியாக எதிர்கொள்ள முடியாதவர்களை, இதுபோன்ற புறவாசல் வழியாக அச்சுறுத்தப் பார்க்கும் அரசியல் செல்லுபடியாகாது என்பதை பா.ஜ.க. தலைமை உணர வேண்டும். அதனை அவர்களே உணரும் காலம் நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### அரசியல் பழிவாங்கல் மூலம் எதிர்க்கட்சிகளை ஒடுக்கத் திட்டம்:

## விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. அரசு தவறாகப் பயன்படுத்துகிறது!

### கட்சித் தலைவர்கள் மோடி அரசுக்கு கடும் கண்டனம்!

**சென்னை,ஜூன்.14–**

**பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சிகளை ஒடுக்க அச்சுறுத்த அமலாக்கத்துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தொடர்ந்து தவறாகப் பயன்படுத்தி வருகிறது.**

**இதன் தொடர்ச்சியாக நேற்று தமிழ்நாடு அரசின் மின்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வுத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீடுகள் மற்றும் தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் அமலாக்கத்துறையினர் நுழைந்து சோதனை நடத்தினர்.**

**இந்த செயலை அகில இந்திய தலைவர்கள் ட்விட்டர் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

**அவர்களது கண்டனம் வருமாறு:**



**மல்லிகார்ஜூன கார்கே!**

**(காங்கிரஸ் தலைவர்)**

"எதிர்க்கட்சி தலைவர்களை விசாரணை அமைப்புகள் மூலம் மோடி அரசு அச்சுறுத்தி வருகிறது. விசாரணை அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளை ஒடுக்கிவிடலாம் என மோடி அரசு நினைக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

**சரத் பவார்**

**(தலைவர் – தேசியவாத காங்கிரஸ் கட்சி)**



எதிர்க்கட்சிகள் ஆளும் அரசு அமைச்சர்களுக்கு எதிராக அமலாக்கத்துறையின் இடைவிடாத நடவடிக்கைகளை நான் கடுமையாக கண்டிக்கிறேன். செந்தில் பாலாஜியின் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலம், ஜனநாயக விரோத மத்திய அரசுக்கு எதிரான குரலை நசுக்கும் அதன் மோசமான நோக்கத்துடன் அமலாக்கத்துறை இப்போது தென் மாநிலங்களுக்குச் சென்றுள்ளது.

**மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி!**



"திமுக அரசுக்கு எதிரான பா.ஜ.க.வின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. விசாரணை அமைப்புகளை பாஜக அரசு தவறாக பயன்படுத்துவது நீடித்து வருகிறது. தமிழ்நாட்டில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரின் அலுவலகம் மற்றும் அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது".

**டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால்!**



எதிர்க்கட்சிகளைத் துன்புறுத்துவதற்கும் மிரட்டுவதற்கும் மத்திய அமைப்புகளை பா.ஜ.க. தவறாகப் பயன்படுத்துகிறது.

தமிழக மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜிக்கு எதிரான அமலாக்கத்துறை ரெய்டுகளுக்கு கடும் கண்டனம்.

அரசியல் பழிவாங்கலால் பாராமுகமாகி, நமது ஜனநாயகத்திற்கு மாற்ற முடியாத சேதத்தை பாஜக ஏற்படுத்துகிறது.

**சீதாராம் யெச்சூரி**

**(பொதுச் செயலாளர்– மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)**



சென்னையிலுள்ள தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு செந்தில்பாலாஜியின் அலுவலகத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியதற்கு வன்மையான கண்டனங்கள்.

மோடி அரசு எதிர்க்கட்சி தலைவர்களை குறிவைத்து அமலாக்கத்துறையை ஆயுதமாக ஏந்தியுள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---


## 'பிபோர்ஜோய்' புயல் : குஜராத்தில் நாளை கரையைக் கடக்கிறது!

புதுடெல்லி, ஜூன் 14-

அரபிக் கடலின் கிழக்கு மத்திய பகுதியில் இந்த மாத தொடக்கத்தில் குறைந்த காற்றழுத்தம் உருவானது. அதன்பிறகு அது கடந்த 6ந்தேதி புயலாக மாறியது. அந்த புயலுக்கு 'பிபோர்ஜோய்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அந்த புயல் வடக்கு திசை நோக்கி கடந்த சில தினங்களாக நகர்ந்து வந்தது.

இந்த நிலையில் அது தீவிர புயலாகவும், அதி தீவிர புயலாகவும் அடுத்தடுத்து மாறியது. வடகிழக்கு அரபிக் கடலில் நிலை கொண்டிருக்கும் 'பிபோர் ஜோய்' புயல் மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது.

இந்த அதிதீவிர புயல் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து 250 கி.மீ. தொலைவில் உள்ளது. இது வியாழக்கிழமை அன்று குஜராத்தின் ஜக்காவ் துறை முகப் பகுதியில் கரை யைக் கடக்கும்



என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அதிதீவிர புயல் கரையை கடக்கும்போது பலத்த மழையும், பலத்த காற்றும் வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மணிக்கு 125 முதல் 150 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசும் என்று கூறப்பட்டு இருந்தது. அதன்படி மராட்டியம், குஜராத் மாநிலங்களில் நேற்று முதல் மிக பலத்த மழையும், மிக பலத்த சூறாவளி காற்றும் வீசத் தொடங்கியுள்ளது. மும்பையில் கடல் கொந்தளிப்பு காணப்படுகிறது. அதில் 4 பேர் சிக்கினார்கள்.

ஒருவர் மீட்கப்பட்ட நிலையில் 3 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை. இதற்கிடையே புயல் காரணமாக நாளை மற்றும் நாளை மறுநாள் குஜராத்தின் கட்ச், துவாரகா, போர்பந்தர், ஜாம்நகர், ராஜ்கோட், ஜூனாகர், மோர்பி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

புயல் காரணமாக குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் 144 தடை உத்தரவு அமல் செய்யப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று முதல் 3 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளது. புயல் அபாயம் உள்ள இதர மாவட்டங்களிலும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

---

### தமிழ்நாட்டில்

## 20 இடங்களில் 100 டிகிரி வெயில்!

சென்னை,ஜூன்.14-

தமிழ்நாட்டில் 20 இடங்களில் வெயிலின் தாக்கம் 100 டிகிரியை தாண்டியுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தாவது:

சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் பொறுத்த வரை 2 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும். இந்த நிலையில் சென்னையில் அதிகபட்சமாக 105 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

திருவள்ளூர், மதுரை மற்றும் திருச்சியில் 103 பாரன்ஹீட்டும், வேலூர், கடலூர், ஈரோடு, கரூர் பரமத்தியில் 102 பாரன்ஹீட்டும், திருப்பத்தூர், நாகை, தூத்துக்குடியில் 101பாரன்ஹீட்டும், நாமக்கல், தஞ்சாவூர், தர்மபுரியில் 100 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவாகியுள்ளது.